Malaysia Nanban
08/08/2009
Page: 1
By: Chandrasekar
Section: Supplements
Region: Malaysia Circulation: 60000
Type: Malaysia - Tamil Newspapers
Size: 1287.00 sq.cms
Frequency: MTWTFS





# உறவும் பாலம்!

பயணக் கட்டுரை:
ப.சந்திரசேகர்

வளர்ந்து வரும் நாடுகளின் வரிசையில் இடம் பிடித்துள்ள சிங்கப்பூருடன் உறவை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்கு "பையர் பிளை" விமான நிறுவனம் உதவ முன்வந்திருப்பதன் மூலம் பேரா மாநிலத்தின் வளர்ச்சி திட்டத்திற்கு உந்துதலை ஏற்படுத்தியுள்ளது.

பேரா மாநிலத்திற்கான விமான சேவை முற்றாக நிறுத்தம் செய்யப்பட்டதன் விளைவாக முதலீடுகளும்,

முதலீட்டாளர்களும் முகம் காட்டாமல் மற்ற மாநிலங்களுக்கு செல்கின்ற சூழ்நிலையில் மாற்றம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது என குறைபட்டுக் கொண்டனர்.

ஈப்போ சுல்தான் அஸ்லான் ஷா விமான நிலையம் மீண்டும் இயங்க வேண்டும்.

அனைத்துலக விமானங்கள் இங்கு வந்து போக வேண்டும் என்று விரும்பினார்கள்.

அன்னிய முதலீடுகள் பெருகும் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் இங்கு வருவார்கள் என்று குரல் எழுப்பினர்.

பேரா மாநிலத்தில் கடந்த பொதுத் தேர்தலுக்கு பிறகு நிலை

நிலையத்தை மீண்டும் செயல்படுத்துவது என்று மாநில அரசாங்கம் முடிவு செய்து அதன் முதல் கட்டமாக சிங்கப்பூருக்கு இருவழி பயணத்தை மேற்கொள்வது என்று முடிவு செய்த போது, மாஸ் நிறுவனத்தின் துணை

நிறுவனமான 'பையர் பிளை' உதவ முன்வந்தது.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்கு தரைமார்க்கமாக செல்வதில் அதிக நேரம் பிடிப்பதை கருத்தில் கொண்டு விமான சேவை முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. 1 மணி 30 நிமிடத்தில் சிங்கையை அடைந்து விடலாம்.

தொடக்க கட்டமாக வாரத்தில் நான்கு பயணங்கள் மேற்கொள்ளப்படுகிறது என்றும் பயணிகளின் வரவேற்பை பொறுத்து அன்றாடப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் பையர் பிளை நிர்வாக இயக்குநர் ஏடி லியோங் கூறினார்.

சுற்றுலாத்துறை வளர்ச்சி காணும் என்றார்.

சிங்கப்பூரியர்கள் பெரும்பாலும் பேரா மாநிலத்திலுள்ள சுற்றுலா தளங்களான பங்கோர், கேமரன் மலை மற்றும் ஈப்போவிலுள்ள சுவை மிகு உணவுகளை சுவைப்பதற்கும் ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் சுற்றுலா முகவர்கள் [illegible]

ஒரு காலத்தில் ஈயம் விளைந்த வெள்ளி மாநிலமாக பேரா மாநிலம் திகழ்ந்தது.

செல்வம் கொழுத்த மாநிலமாக செல்வந்தர்கள் வாழ்ந்த பகுதியாக இம்மாநிலம் விளங்கியதை மறுப்பதற்கு இல்லை.

நாட்டின் வளர்ச்சியில் சுற்றுலா துறை மிகப் பெரிய பங்கை ஆற்றுகிறது என்பதை உணர்ந்த வர்த்தகர்கள் அத்துறையில் கவனம் செலுத்தினர்.

ஈப்போ சிங்கப்பூர் இடையிலான பையர் பிளை விமான சேவை வெள்ளோட்டத் தொடர்பில் பேரா மாநில அரசு சிங்கப்பூருக்கு மூன்று நாள் கல்விச் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

இச்சுற்றுலாவில் பேரா மாநில அரசு அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் அழைக்கப்பட்டனர்.

பேரா அரசு ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ மா ஹூான் கூன் தலைமையில் சென்ற பேராளர் குழுவில் பேரா மந்திரி புசாரின் சிறப்பு ஆலோசகர் டத்தோ எஸ். வீரசிங்கம், மாநில நிதித்துறை அதிகாரி டத்தோ ஜமாலுடின் அல் அமின், மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் முகமட் சாஹிர் காலிட் உடனிருந்தனர்.

சிங்கப்பூரில் தங்கியிருந்த மூன்று நாட்களில் நகரின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், போக்குவரத்து திட்டமிடல் பிரிவின் செயல் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் மிகப் பெரிய இரவு சந்தையான கிளார்க் குவாய் எனும் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உணவகங்கள், பொழுது

போக்கு மையங்கள், படகு சவாரி அனைத்தும் வருகையாளர்களை மிகவும் கவர்கின்றன.

தொழில் துறையில் சிங்கப்பூர் என்ன தான் முன்னேற்றம் கண்டாலும் அது கலைக்காகவும் கலையின் வளர்ச்சிக்காகவும் முக்கிய பங்காற்றியுள்ளது என்பதற்கு

சிங்கப்பூரின் அடையாளச் சின்னங்களில் ஒன்றான இரண்டு டுரியான் பழங்கள் கவிழ்த்து வைத்திருப்பது போன்றதொரு காட்சி தரும் "எஸ்பிளனேட்" (Esplanade) கலை அரங்கத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டோம்.

கலையின் மகத்துவம் உணர்ந்து கலை படைப்புகளில் ஒரு புதுமையை,



**Malaysia Nanban**
**08/08/2009**
**Page: 1**
**By: Chandrasekar**
**Section: Supplements**
**Region: Malaysia Circulation: 60000**
**Type: Malaysia - Tamil Newspapers**
**Size: 1287.00 sq.cms**
**Frequency: MTWTFS**



ஏற்படுத்தும் புதிய தொழில் நுட்பத்துடன் கட்டப்பட்டிருக்கிறது.

சமஸ்கிருதத்தில் 'சிம்ஹா' என்றால் சிங்கம் என்றும் புறம் என்றால் நகரையும் குறிப்பிடுகிறது. அதன் அடிப்படையில் சிங்கப்பூர் பெயர் உருவாகியிருக்கும் என்று வரலாற்று குறிப்புகளில் கூறப்படுகிறது.

சங் நீலா உத்தாமா என்பவரால் சிங்கப்பூர் கண்டுபிடிக்கப்பட்டபோது இங்குள்ள சிங்கப்பூர் ஆற்றின் கரையோரங்களில் மலாய்க்காரர்கள் மீனவக் கிராமங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

1819ஆம் ஆண்டில் சர்ஸ்டம் பெர்த்ராபெல்ஸ் அவர்கள் தலைமையில் பிரிட்டிஷ் கிழக்கு












**Malaysia Nanban**
**08/08/2009**
**Page: 1**
**By: Chandrasekar**
**Section: Supplements**
**Region: Malaysia Circulation: 60000**
**Type: Malaysia - Tamil Newspapers**
**Size: 1287.00 sq.cms**
**Frequency: MTWTFS**







இந்திய கம்பெனி காலபதித்த பிறகு சிங்கப்பூர் வர்த்தக பகுதியாக உரு வாக்கம் கண்டது.

தென்கிழக்காசியாவில் பிரிட்டி சார் கால்பதிக்க முக்கியத் தளமாக இது அமைந்தது.

சிங்கப்பூர் சிறிய நாடாக இருந்த போதிலும் இவ்வளவு பெரிய வளர்ச்சியை கண்டுள்ளதற்கு காரணம் முறையான திட்டமிடல், திட்ட மிட்டதை சரியாக செய்து முடிப்பது போன்றவை முன் நிறுத்தப்படுகிறது.

அடுத்த 20 ஆண்டுகளுக்கு நாட்டை மேம் படுத்துவது குறித்து இப்போதே திட்ட மிடுகிறார்கள். அடுக்கடுக்கான அடுக்குமாடி கட்ட டங்களை கொண் டுள்ள இந்நாட் டில் மேம்பாட் டுப் பணிகளுக்கு எந்தத் தரப்பும் ஆட்சேபம் தெரி விப்பது இல்லை என்பது தனி சிறப்பு. சிங்கப் பூர்வாசிகள் அதிக அளவில் கெந்திங் மலைக்கு செல்கிறார்கள். அங்கு நிறைய பேர் வேலையும் செய் கிறார்கள். இதனால் நாட்டிலிருந்து பணம் அதிகம் வெளியாகிறது என்று கருதிய சிங்கப்பூர அரசு இரண்டு "கசினோ" சூதாட்ட மையங்களை அனைத்துலக தரத்தில் நிர்மாணித்து வருகிறது. தங்கும் விடுதிகள், கேளிக்கை மையங்கள், சூதாட்ட தளங்கள், வர்த் தக மையங்கள், என்று அனைத்தும் ஒன்று சேர புதிதாக அதே வேளையில் அடுத்த 20 ஆண்டுகள் முன்நோக்கும் விதத்தில் புதிய கோணத்தில் நிர்மா ணிப்பு பணிகளை துரிதப்படுத்தி யுள்ளது. வானுயர்ந்த கட்டடங்களை பார்த்து கிருகிருத்து போன நிலையில் தாயகம் திரும்பினோம்...



MEDIA MONITORS
ASIA MEDIA MONITORS Sdn Bhd



**Malaysia Nanban**
**08/08/2009**
Page: 1
By: Chandrasekar
Section: Supplements
Region: Malaysia Circulation: 60000
Type: Malaysia - Tamil Newspapers
Size: 1287.00 sq.cms
Frequency: MTWTFS



மையங்கள், சூதாட்ட தளங்கள், வர்த்தக மையங்கள், என்று அனைத்தும் ஒன்று சேர புதிதாக அதே வேளையில் அடுத்த 20 ஆண்டுகள் முன்நோக்கும் விதத்தில் புதிய கோணத்தில் நிர்மாணிப்பு பணிகளை துரிதப்படுத்தியுள்ளது. வானுயர்ந்த கட்டடங்களை பார்த்து கிருகிருத்து போன நிலையில் தாயகம் திரும்பினோம்...



